பக்கங்கள் 17+4

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 26 திங்கட்கிழமை 10.03.2025 | அதிர்வு 219

## குட்டித் தேர்தலில் களமிறங்கும் சமல்



வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளார் என்று முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பிடியாணை உத்தரவை இடைநிறுத்தக் கோரி தேசபந்து தென்னக்கோன் ரிட் மனுத் தாக்கல்!



முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம, டபிள்யூ. 15 ஆவது விருந்தகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகத் தன்னைக் கைது செய்ய மாத்தறை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்தி இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறு அந்த மனுவில் அவர் கோரியுள்ளார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லாபர் தாஹிர் மற்றும் 02

### ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி

# யாழில் மாத்திரம் கூட்டாகப் போட்டி

### ஏனைய இடங்களில் அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டி என்கின்றார் அடைக்கலநாதன்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

**“வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் மாத்திரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளது.** 02



# அநாகரிகமாக நடந்த யூடியூப்பருக்கு மறியல்

### மல்லாகம் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டினுள் இரவு வேளை நுழைத்து அநாகரிகமாக நடந்து கொண்ட யூடியூப்பர் உள்ளிட்ட நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 02

# தாயாருடன் உறக்கத்தில் இருந்த குழந்தை இறந்த நிலையில் மீட்பு!



**(வவுணதீவு நிருபர்)**

மட்டக்களப்பு, நாவற்காடு கிராமத்தில் வீட்டில் தாயுடன் உறக்கத்தில் இருந்த குழந்தை இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்காடு, இறக்கத்துமுனை பகுதியில் பிறந்து மூன்று மாதங்களான குழந்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு தாயாரிடம் பால் அருந்தியுள்ளது. அதன்பின்னர் குழந்தையும் தாயும் தமது வீட்டில் உறக்கியுள்ளனர். 02

# யாழில் இருந்து இந்தியர்கள் நாடு கடத்தல்

நோய்களைக் குணப்படுத்துவதாக இந்தியாவில் இருந்து வருகை தந்து யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் தீவிர மதப் பிரசாரத்தில் ஈடுபட்ட குழுவினர் சுற்றுலா விசா நடைமுறைகைள மீறிய குற்றச்சாட்டில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இந்தக் குழுவினர் குடிவரவு - குடியகல்வுத்துறை புலனாய்வாளர்களால் கண்டறியப்பட்டனர். இதையடுத்து நேற்றுமுன்தினம் இரண்டு மதபோதகர்கள் பொலிஸாரால் 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தாயாருடன்...

மறுநாள் இன்று திங்கட்கிழமை அதிகாலை குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக எழுப்பியபோது குழந்தை மூச்சு சுவாசம் இல்லாமல் இருந்துள்ளது.

உடனடியாகக் குழந்தை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. எனினும், குழந்தை முன்னரே இறந்து விட்டது என்று வைத்தியர் தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தைப் பிரேத பரிசோதனைக்குப் பணித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### பிடியாணை உத்தரவை...

சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற ஆயம் முன்னிலையில் இன்று பரிசீலனைக்கு அழைக்கப்பட்டது.

பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுத்த பின்னர், மனுவை எதிர்வரும் 12 ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### குட்டித் தேர்தலில்...

அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மக்கள் கோரும் பகுதியில் தான் களமிறங்குவார் என்றும் அவர் கூறியுள்ளார்.

### யாழில் இருந்து...

கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக நாடு கடத்தப்பட்டனர்.

இதேவேளை, இந்தியாவில் சுற்றுலா விசாவில் வந்து, யாழ்ப்பணத்தில் சிற்ப வேலைகளில் ஈடுபட்டிருந்த 8 பேர் மற்றும் யாழில் உள்ள உணவகங்களில் பணிபுரிந்த ஐவர் என மேலும் 13 இந்தியப் பிரஜைகள் யாழ்ப்பாணம் விமான நிலையம் ஊடாக சென்னைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

### அநாகரிகமாக...

யாழ். பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வறியவர்களுக்கு உதவி செய்வதாகப் புலம்பெயர் தமிழர்களிடம் நிதியைப் பெற்று, அதன் ஊடாக உதவி செய்வது போன்ற காணொளிகளைத் தனது யூடியூப் தளத்தில் பதிவேற்றி வந்துள்ளார்.

உதவி தேவைப்படுவோரிடம் நக்கல், நையாண்டியோடு பேசியே காணொளி எடுத்து அவர் பதிவிட்டு வந்துள்ளார். அதற்குப் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பி வந்தன.

இந்நிலையில் , கடந்த சில தினங்களுக்கு முன்னர் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் பாடசாலை மாணவி ஒருவரின் வீட்டுக்கு இரவு வேளை சென்ற மேற்படி நபர், மாணவியைக் காணொளி எடுக்க முற்பட்டுள்ளார். அதற்கு மாணவி மறுப்புத் தெரிவிக்கவே காணொளியில் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியதை அடுத்து பல்வேறு தரப்பினரும், தமது கண்டனங்களைத் தெரிவித்து இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இவ்வாறு உதவி செய்பவர்களின் நிதி கையாடுகைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரி வந்தனர்.

இந்நிலையில், குறித்த காணொளியில் காணப்பட்ட குடும்பத்தினர் பண்டத்தரிப்பு பகுதியில் வசித்து வரும் நிலையில், அவர்களுடன் சமரசம் பேச மேற்படி இளைஞர் தனது சகாக்களுடன் நேற்று சென்ற சமயம், அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்துச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் யூடியூப்பரையும் அவருடன் சென்ற மூவரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் பின்னர் நால்வரையும் இன்று திங்கட்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை அவர்கள் அனைவரையும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மன்று, குறித்த யூடியூபருடன் இணைந்து வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து காணொளி எடுப்போர் மற்றும் அவருக்கு உடந்தையாகச் செயற்பட்ட நபர்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து, அவர்களையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

### யாழில் மாத்திரம்...

வடக்கு, கிழக்கில் ஏனைய இடங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளது.”

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை மதியம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் போட்டியிடவுள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக அதன் அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம்.

அதற்கான கட்டுப் பணத்தைச் செலுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். ஒட்டுமொத்தமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அனைத்து சபைகளிலும் போட்டியிடும்.

மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணை மீளப்பெற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அதற்கான தேர்தல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது. எனவே, மன்னார் பிரதேச சபை தேர்தலில் போட்டியிட நாங்கள் தயாராகவுள்ளோம்.

ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகள் மாத்திரமே ஒரு கூட்டாக இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளது.

அண்மையில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கலந்துரையாடல் மத்திரமே முன்னெடுக்கப்பட்டது. எனினும், 9 கட்சிகளும் இணைந்துள்ளோம் என்று தெரிவிக்கவில்லை. 9 கட்சிகளும் இணைந்து கலந்துரையாடலை மாத்திரமே முன்னெடுத்தோம்.

இந்தக் கூட்டு யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அமைய இருக்கின்றது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளது. ஐங்கரநேசனின் கட்சி தனித்துப் போட்டியிடுகின்றதா? இல்லையா? என்று தெரியவில்லை. எனினும், இந்த அணியில் இருந்து விலகியுள்ளதாக ஐங்கரநேசன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் மாத்திரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடும்.”

– என்றார்.

# வீதியில் கைவிடப்பட்ட நிலையில் இரண்டு மாத ஆண் குழந்தை மீட்பு



அம்பலாங்கொடை, மாதம்பே, தேவகொட பிரதேசத்தில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த குழந்தை ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இரண்டு மாத ஆண் குழந்தை ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தேவகொட பிரதேசத்தில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் குழந்தை ஒன்று இருக்கின்றது என்று அம்பலாங்கொடை பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குழந்தையை மீட்டு, உடனடியாக பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மேலும், குழந்தை நலமாக இருக்கின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சந்தர்ப்பவாத அரசின் ஆட்சி....!

அநுர குமார திஸநாயக்க அதிகாரத்திற்கு வந்தமையை - தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றியமை - ஓர் அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றமாக கருதவே முடியாது என்பதை சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கம் ஆதாரங்கள், நிரூபணத் தகவல்களோடு அடித்துக் கூறியிருக்கின்றார்.

கொழும்பில் டி.பி.எஸ்.ஜெயராஜ் எழுதிய 'அரசியல் அதிகாரத்தின் வர்க்கத்தின் மாற்றம்' நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும் போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அநுர குமார திஸநாயக்க ஒரு வர்க்க ரீதியான புரட்சி மூலம் ஆட்சியை அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை.

அறகலய போராட்டத்தின் மூலம் மக்கள் முறைமை மாற்றத்தை கோரியிருந்தார்கள். இந்தப் போராட்டத்தில் தொழிலாளர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் தங்களை இணைத்துக்கொண்டிருந்தனர்.

அதன் ஊடாக ஒரு சமூக மாற்றம் நிகழ்ந்தது, அந்த சமூக மாற்றத்தை கைப்பற்றி தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. அவர்கள் இதனை சரியாகப் பயன்படுத்தியிருந்தார்கள். அவ்வளவுதான். இது வர்க்க ரீதியான மாற்றம் இல்லை. தேசிய மக்கள் சக்தியின் மேடையில் மேட்டுக்குடியினரை - வர்த்தக சமூகத்தினரை - காணமுடிகின்றது என்ற உண்மையை அம்பலப் படுத்துகின்றார் சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கம்.

அநுர குமார திஸநாயக்க தன்னை ஓர் இடதுசாரியாக எந்த மேடையிலும் அறிமுகப்படுத்தவில்லை. தேசிய மக்கள் சக்தி ஓர் இடதுசாரிக் கட்சி என எந்த மேடையிலும் அறிவிக்கப்படவில்லை.

அதிகாரத்திற்கு வந்த பின்னர் அநுர குமார திஸநாயக்க செயற்பட்ட விதம் குறித்து பார்க்கவேண்டும். அவர் உண்மையான இடதுசாரியா என்பதை அது சுட்டும். முதலில் ஒரு வர்த்தக சமூகத்தைச் சேர்ந்தவரை - வணிகத் தட்டைச் சேர்ந்தவரை - தனது பிரதான ஆலோசகராக நியமித்தார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி செய்த முதல் வேலை இதுதான் என்பதை அம்பலப்படுத்துகின்றார் சுவஸ்திகா.

தேர்தல் பிரச்சாரத்தின் போது சர்வதேச நாணய நிதியத்தின்கடன்மறுசீரமைப்புத் திட்டத்தை கடுமையாக விமர்சித்திருந்த தேசிய மக்கள் சக்தி அதனை பரிசீலிப்பதே முதல் நடவடிக்கை என அப்போது தெரிவித்திருந்தது.

வென்ற பிறகு ரணில் விக்கிரமசிங்க காலத்தின் அதே கடன்மறுசீரமைப்பு திட்டத்தை அப்படியே முன்னெடுக்கின்றார்கள். வர்க்க மாற்றம் என்றால் வேறு திட்டத்தை இவர்கள் முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் இவர்கள் அதனைச் செய்யவில்லை என்று சுவஸ்திகா சுட்டுவது நோக்கப்பட வேண்டிய விடயம்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை இடதுசாரிகள் எதிர்த்தார்கள். அந்த ஆட்சிமுறையை மாற்றும் திட்டத்திலிருந்து அநுர அரசு நழுவுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியத்தை சூறையாடியே-அதனைபயன்படுத்தியே - ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணயநிதியத்தின் கடன்மறுசீரமைப்பினை முன்னெடுத்தார். அதையே அநுரவும் தொடர்கின்றார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை 1979 முதல் எதிர்த்தவர்கள் இடதுசாரிகள். அதனை வேறு வடிவத்தில் தொடர முனைகின்றது அநுர அரசு.

இவற்றின் அடிப்படையில் இந்த அரசு எந்த வர்க்கத்தைச் சார்ந்தது என்பதை அடையாளப் படுத்துகின்றார் சுவாஸ்திகா.

தேசிய மக்கள் சக்தி வர்க்க ரீதியிலான அரசியல் கட்சி என்பதை விட, மக்கள் மத்தியில் எந்த விடயம் எடுபடுமோ அதனை பயன்படுத்தும் கட்சி.

இனவாதம் பிரபல்யமானதாக - அரசியலுக்கு பயன்படுத்தப்படக் கூடியதாக- இருந்தபோது அதனை வசமாகப் பயன்படுத்தினார்கள்.

பொருளாதாரம் அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடியதாக காணப்பட்ட வேளை அதனை பயன்படுத்தினார்கள்.

ஆக, இது ஒரு சந்தர்ப்பவாதக் கொள்கைப் போக்குடைய தரப்பின் ஆட்சி. அவ்வளவுதன்...!





# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலை திட்டம்

(எஸ். நிதர்ஷன்)

'கிளீன் ஸ்ரீலங்கா' வேலை திட்டத்தின் துப்புரவு பணிகள் நேற்று அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய கோப்பாய் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவனின் வழிகாட்டலில் இன்றைய தினம் கோப்பாய் பிரதேச செயலாளர் சிவசிறி தலைமையில் குறித்த வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.


இதன்போது பிரதேச வைத்தியசாலையின் பணிப்பாளர், பணியாளர்கள், நோயாளர் நலன்புரி சங்கத்தினர், அச்சுவேலி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், அச்சுவேலி சிற்றூர்தி சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள், சன சமூக நிலைய உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அச்சுவேலி பிரதேச சபையின் உதவியுடன் பிரதேச வைத்தியசாலையில் உள்ளக வளாகங்களை துப்புரவு செய்தனர்.



அத்துடன் வைத்தியசாலையின் வளாகத்தில் புதிய மரக் கன்றுகளையும் நட்டு வைத்தனர்.

இதன்போது அகற்றப்படும் கழிவுகளைத் தரம் பிரித்து உரிய இடத்தில் அப்புறப்படுத்துவதற்கான கழிவு கூடைகளையும் வலி கிழக்கு பிரதேச சபையினர் வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கினர்.



# தலவாக்கலையில் தனித்து மலையக மக்கள் முன்னணி!

## போட்டியிடும் என்கிறார் வேலுசாமி இராதகிருஷ்ணன்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து போட்டியிடும் பட்சத்தில் தலவாக்கலை பிரதேசத்தில் மலையக மக்கள் முன்னணி தனித்து போட்டியிடும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



நேற்று சனிக்கிழமை ஹட்டனில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உறையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதகிருஷ்ணன்,

பதுளை மாவட்டத்திலும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி தனித்து போட்டியிடவுள்ளது. அதேபோல் ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியோடு கூட்டணியாக நாம் போட்டியிட விருக்கின்றோம்.

தலவாக்கலை என்பது மலையக மக்கள் முன்னணியின் கோட்டை. அங்கு நாம் தலவாக்கலை லிந்துளை நகரசபையைக் கைபற்ற வேண்டும் என்ற நோக்கில் தன்னிச்சையாகப் போட்டியிடுவதோடு அனைத்து சபைகளிலும் எமது பிரதிநிதிகள் அங்கம் வகிக்க வேண்டும்.

தேர்தலில் 25 சதவீதம் பெண்கள் போட்டியிடுவதற்குச் சட்டமாக கொண்டு வரப்பட்டுள்ளது.

நாட்டின் இன்று பெண்களுக்குக் கல்வி முதல் அவர்களின் தொழில் மற்றும் உழைப்புவரை முதலிடத்தை வழங்கவேண்டும். வரலாற்றில் இம்முறை மாத்திரம்தான் அதிக பெண்கள் நாடாளு மன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

பெண்களுக்கு இன்னமும் அநீதிகள் இழைக்கப்பட்டு வருகின்றன. பெண்களை மதிக்க வேண்டும் என்பது வீட்டில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பருவச் சீட்டு எடுத்து சென்ற தமிழ் மாணவர்களைப் பஸ்ஸில் இருந்து வெளியேற்றிய சம்பவம் தொடர்பாகப் போக்குவரத்து அமைச்சர் நாடாளு மன்றத்தில் மாணவர்களிடம் மன்னிப்புக் கோரியிருக்கிறார். அந்தச் சம்பவத்தைக் கணொளியாகப் பதிவிட்ட மாணவனை நான் வாழ்த்துகிறேன்.

நாட்டின் முதல் பிரதம மந்திரியாக ஒரு பெண் ஒருவரே இருந்தார். அதே போல் தற்போதய புதிய அரசிலும் பிரதமராக ஹரீனி அமரசூரிய செயற்பட்டு கொண்டிக்கிறார். – என்றார்.






# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள் சாய்ந்தமருதில் கைப்பற்றப்பட்டு அழிப்பு!

**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை செய்யப்பட்டது. சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். அஸ்லம் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் ஏ. முஸம்மில் முதலானோர் கலந்து கொண்டனர்.

இதன் போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற நொறுக்கு தீனிகளும், நிறக்குறியீடு இல்லாத பானங்களும் கைப்பற்றப்பட்டன.

அக்கடையின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும், பொறுப்பும் ஆகும். ஆகவே பொதுமக்கள் உங்கள் முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் 0753333453, 0776702703 , 077 375 1749 எனும் இலக்கங்களுக்கு அறியத்தாருங்கள் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொது மக்களைக் கேட்டுள்ளது.

# கல்முனை ராமகிருஷ்ண மாணவருக்கு மத்தியஸ்தம் தொடர்பான செயலமர்வு!

**(பாறுக் ஷிஹான்)**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான பயிற்சி செயல் அமர்வு கல்முனை ராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வானது கல்முனை வடக்கு பிரதேச செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் அருள்பிரசாந்தன் ஒருங்கிணைப்பில் பாடசாலையின் அதிபர் திருமதி விஜயசாந்தினி நந்தபாலா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு வளவாளராக அம்பாறை மாவட்ட செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். றிஸ்மினா கலந்து கொண்டார்.

இப்பாடசாலையின் பாடசாலை மத்தியஸ்த அலகுக்குப் பொறுப்பான ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இப் பாடசாலையில் தெரிவு செய்யப்பட்ட 50



மாணவர்களுக்கு அது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சிச் செயலமர்வின் மூலம் மாணவர்களுக்கு முரண்பாடு, தொடர்பாடல், கலந்துரையாடல் போன்ற விடயங்கள் மூலம் மத்தியஸ்தம் செய்யும் முறைகள் தொடர்பாக கூறப்பட்டது. பாடசாலையில் பாடசாலை மத்தியஸ்த அலகும் நிறுவப்பட்டது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# ‘கலைஞர் சுவதம்’ விருதுகள் வழங்கும் நிகழ்வு கல்முனையில்

(பாறுக் ஷிஹான்,
எம். என்.எம்.அப்ராஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், அம்பாறை மாவட்டச் செயலகத்தின் வழிகாட்டலில், கல்முனை பிரதேச செயலகம் நடத்திய "கலைஞர் சுவதம்" விருது வழங்கும் நிகழ்வு கல்முனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு, கலாசார உத்தியோகத்தர் திருமதி எம்.எச்.பௌசுல் ஹிபானாவின் நெறிப்படுத்தலில், கல்முனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ. சி.எம். பழீல் தலைமையில் நடைபெற்றது.



கல்முனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சாஹுல் ஹமீட் செய்னுல் கதீர் (எழுத்தாளர்), சுமைய்யா ஜெஸ்மி மூஸா (பல்துறைக் கலைஞர்), முகம்மது யாஸீன் முகம்மது சுபியான் (பொல்லடிக் கலைஞர்) ஆகிய மூன்று கலைஞர்களுமே சுவதம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பரிசு, சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்கள் என்பன பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்டச் செயலக மேலதிக அரச அதிபர் சிவ ஞானம் ஜெகராஜன், கௌரவ அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.நிம்ஸான் ஆகியோரால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை சமூர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், எஸ்.எஸ். எம்.நௌபல், கிராம அபிவிருத்தி உத்தயோகத்தர் ஏ.ஏ.ஜாபீர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எச். ஜெமீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை பிரதேச செயலகத்தில் சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளராகப் பணியாற்றும் மருதமுனையை சேர்ந்த ஏ. ஆர். எம். சாலிஹ் எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி தனது 60 ஆவது வயதைப் பூர்த்தி செய்து, அரச சேவையில் இருந்து ஓய்வு நிலைக்கு செல்லவுள்ளார்.

இதனை முன்னிட்டு ஏ.ஆர்.எம். சாலிஹ் நினைவு சுவடுகள் எனும் நூல் அம்பாறை மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.நிம்ஸான் ஆகியோருக்கு கல்முனை பிரதேச செயலகத்தில் சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ்ஹால் வழங்கப்பட்டது.

# திருமலை நகரப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் அவதி!

(எச் எம். ஹலால்தீன் )

திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட என்.சி.பிரதான வீதியில் கட்டாகாலி மாடுகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதி ஊடான போக்குவரத்து தடைப் படுவதோடு, பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகரத்தின் மிக முக்கியமான வீதியாக இது காணப்படுவதோடு, மக்கள் நிறைந்த பகுதியாகவும் வீதி காணப்படுகின்றது.

நாளொன்றுக்கு சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் முக்கிய வர்த்தக நிலையங்கள், வங்கிகள் அமைந்துள்ள இந்தப் பகுதியில் கட்டாகாலி மாடுகளின் நடமாட்டத்தால் வியாபாரிகள் உட்பட பாதசாரிகளும் பாதிக்கப்படுகின்றனர்



என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் சம்பந்தமாக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# சர்வதேச மகளிர் தின விற்பனைக் கண்காட்சி

(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் வார நிகழ்வுகள் பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இடம்பெற்று வருகின்றன.

சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூரும் வகையில் "நிலையான நாளையை உருவாக்குதல், அவ ளுடைய பலமே பாதை" என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு மார்ச் 02 முதல் 08 வரை தேசிய மகளிர் வாரம் கொண்டாடப்பட்டது.

அந்த வகையில் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை மேம்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஏற்பாடு செய்த விற்பனை கண்காட்சி பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட 30 இற்கும் அதிகமான உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

இந் நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் உட்பட ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள் , பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சாய்ந்தமருதில் டெங்கு களத்தடுப்பு!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு களத்தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது அண்மையில் வைத்திய சாலை வீதியில் டெங்கு நோயாளியாக இனங்காணப்பட்டவரின் வீட்டுக்கு களப் பரிசோதனை மேற்கொண்டு அவ்வீட்டின் சுற்றுச்சூழலை அவதானிக்கப்பட்டது. அங்கு டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய அபாயம் காணப்பட்டமையால் அந்த வீட்டின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கலும் செய்ய உத்தேசிக்கப்பட்டது.

இதனை அடுத்து அவ் வீதியிலுள்ள 20 வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன.

இந்த டெங்கு தடுப்பு களப்பணிகளில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது டெங்கு நோயில் இருந்து பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுநடவடிக்கைகளும்பொதுமக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன.





# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பாது வைத்திருப்பது பாரதூரமான குற்றம்!

## சண்முகம் குகதாசன் எம்.பி. காட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பாமல் வைத்திருப்பது பாரதூரமான குற்றச் செயலாகும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று (10) 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மீதான விவாதத்தில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு தொடர்பாக விவாத உரையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் கல்வித் துறையை மேம்படுத்த வேண்டுமாயின் பாடத் திட்டம், கற்பித்தல் முறைமை, ஆசிரியர் பணிக்கு ஆட்சேர்ப்பு முதலியவற்றில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அத்தோடு நிதி ஒதுக்கீடு, ஆளணி மற்றும் பௌதீக வளப்பற்றாக் குறைக்கும் தீர்வுகாண வேண்டும்.

நமது நாட்டிலுள்ள பாடசாலைகளில் பெரும்பாலும் ஆசிரியர் மையக் கல்வியை ஒட்டியே கற்பிக்கப்படுகிறது. மேற்கு நாடுகளில் u;oward Gardner's Multiple Intelligences Theory and Differentiatedleaning Theory, John Dewey's Inquiry Based Learning Vygotsky's Collaborative Learning and Scaffolding Theory முதலிய கோட்பாடுகளைப் பின்பற்றி கற்பிக்கின்றனர்.

இதன் மூலம் மாணவர் நுபெயபநஇ நுஒிடழசநஇ Explain, Elaborate, Evaluate என்ற அடிப்படையில் ஆர்வத்தோடு கற்கின்றனர். மேற்படி மாணவர் மையக் கற்பித்தல் முறைகளை நாமும் பின்பற்றுவதன் மூலம் நமது நாட்டின் கற்றல் திறனையும் கல்வித் தரத்தையும் அறிவையும் மேம்படுத்தலாம்.

நமது நாட்டில் உள்ள மாணவர் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு கல்வியை கற்கின்றனர். இதன் பொருட்டு ஆண்டு தோறும் அண்ணளவாக 2 லட்சத்து 65 ஆயிரம் மாணவர் க.பொ.த. உயர்தர தேர்வுக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் ஒரு லட்சத்து 65 ஆயிரம் மாணவர் பல்கலைக் கழக அனுமதி பெறத் தகுதி பெறுகின்றனர். தகுதி பெற்றோரில் 40 ஆயிரம் மாணவருக்கு மட்டுமே பல்கலைக் கழக அனுமதி கிடைக்கிறது. மேலும் 10 ஆயிரம் மாணவருக்குக் கல்வியல் கல்லூரி அனுமதி கிடைக்கிறது. தேர்வில் வெற்றி பெறாத ஒரு லட்சம் மாணவரும் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்று அனுமதி கிடைக்காத 115,000 மாணவரும் என்ன செய்வது என்று



தெரியாமல் தடுமாறி நிற்கின்றனர். இவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு அரசுக்கும் சமூகத்துக்கும் உண்டு.

எமக்கு அண்மையில் உள்ள இந்தியா உட்பட உலகில் உள்ள பல்வேறு நாடுகள் தத்தம் நாட்டிலுள்ள இத்தகைய மாணவருக்காக oly Technic எனும் தொழில் நுட்பக் கல்லூரிகளை நடத்துகின்றன. இந்தக் கல்லூரிகளில் நூற்றுக் கணக்கான மூன்றாண்டுப் பட்டயப் பயிற்சி நெறிகள் கற்பிக்கப் படுகின்றன. பல்கலைக் கழக அனுமதி கிடைக்காத மாணவர் இவற்றில் சேர்ந்து கல்வி கற்று எளிதாக வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. அத்தகைய பயிற்சி நெறிகளை இந்த நாட்டிலும் தொடங்க வேண்டும்.

நமது நாட்டின் கல்வி முறையானது தொழில் சந்தையோடு இணைந்ததாக இல்லை.அதாவது தொழில் சந்தையில் வேலை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய Qualification Skills and experience அவர்களிடம் இல்லை. இதனால் பட்டதாரிகள் தொழிற் சந்தையில் வேலையை பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளனர்.

எனவே நம் நாட்டு பாடத் திட்டங்களைத் தொழில் சந்தைத் தேவைகளோடு இணைந்ததாக மாற்றி அமைக்க வேண்டும். மேற்கு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் தமது மாணவர் உலகத்தொழில் சந்தையில் போட்டி போட்டு வேலையைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் ஆயிரக் கணக்கான பட்டப் படிப்புகளை நடத்துகின்றன. எடுத்துக் காட்டாக வழசழவெழ பல்கலைக்கழகம் 948 பட்டப் படிப்புக்களை நடத்துகின்றது.

இதுபோல நமதுநாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களும் வேலை வாய்ப்புக்களைப் பெறக் கூடிய பட்டப் படிப்புக்களை நடத்த ஆவன செய்யவேண்டும். இதன் பொருட்டாகத் தொழிற் பயிற்சி, ஆய்வு நிதி மற்றும் ளுவுநுஆ (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ) திறன் மேம்பாட்டுத்திட்டங்களை உள்ளடக்கிய நன்கு வரையறுக்கப்பட்ட உயர்கல்வி சீர்திருத்த உத்தியை அரசு அறிமுகப்படுத்த வேண்டும்.

இந்த அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு 206 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவுக்காகவும் 65 பில்லியன் ரூபா மூலதன செலவுக்காகவும் மொத்தமாக 271 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 11 பில்லியன் ரூபா கூடுதலானது ஆகும். இந்த அதிகரிப்பு கல்வித் துறையைப் பொறுத்தவரை போதுமானது அல்ல. மொத்தப் பாதீட்டில் கல்விக்கான ஒதுக்கீடு 6.4 வீதமாக உள்ளது. இது குறைந்தது 10 வீதமாக ஆவது உயர்த்தப்பட வேண்டும்.

ஆசிரியர் அபிவிருத்திக்கு இந்த ஆண்டில் 6.13 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 2.08 பில்லியன் ரூபா அதிகமாகும். இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். எனினும் தொடக்கப் பள்ளிகளின் வசதியை மேம்படுத்த கடந்த ஆண்டு 302 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டில் இது 10 மில்லியன் ரூபா ஆக குறைக்கப்பட்டுள்ளது. இது கவலை தரும் செய்தியாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டில் உள்ள பெரும்பாலான பல்கலைக் கழகங்கள் மோசமான உட்கட்டமைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட ஆய்வு நிதியால் பாதிக்கப்பட்டுள்ளன.

அறிவு சார்ந்த பொருளாதாரமாக இலங்கை மாறுவதை நோக்கமாகக் கொண்டால், இந்த பல்கலைக்கழகங்கள் நவீன வசதிகள், ஆய்வு நிதி மற்றும் வினைத்திறனான ஆசிரியர் குழாத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டாக உட்கட்டமைப்பு மேம்பாடு, ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் தொழிற்துறை ஒத்துழைப்பு முதலியவற்றுக்கான ஒதுக்கீடுகளுக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இப்பொழுது உள்ள முறையில் ஆசிரியர் வளப்பங்கீடு சரியான முறையில் அமையவில்லை. ஆசிரியர் நியமனத்தின் பொழுது பெரும்பாலான ஆசிரியர்கள், பின்தங்கிய இடங்களுக்கு நியமனங்களை பெற்று வருகின்றனர். வந்து சில காலங்களில் தத்தமது மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர்.

இந்த சிக்கலை தீர்ப்பதற்கு கல்வியல் கல்லூரிக்கு அனுமதி வழங்கும் பொழுது பிரதேச செயலாளர் மட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து பயிலுநர்களைத் தெரிவு செய்தால்

தொடர்ச்சி▼

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பாது வைத்திருப்பது பாரதூரமான குற்றம்!

**தொடர்ச்சி▲**

இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம்.

பொது நிர்வாக அமைச்சு கிராம அலுவலர்களை நியமிக்கும் பொழுது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளரின் பிரிவுகளில் உள்ளவர்களையே நியமிக்கின்றது. இதே முறையை கல்வி அமைச்சும் பின்பற்றினால் ஆசிரியர் பற்றாக் குறைக்கு தீர்வு காணலாம். இது குறித்த ஒரு கொள்கை முடிவை அரசு விரைவில் எடுத்துச் செயற்படுத்த வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் தொடக்கக் கல்வியில் 278 ஆசிரியர் பற்றாக்குறையும், இடைநிலைகல்வியில் 991 ஆசிரியர் பற்றாக்குறையும், உயர்நிலைக் கல்வியில் 606 ஆசிரியர் பற்றாக்குறையும் ஆக மொத்தம் 1875 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறையோடு பாடசாலைகளை நடத்துவது வருங்கால தலைமுறைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒரு குற்றச் செயலாகும். தொடர்ந்தும் இவ்வாறான வெற்றிடங்களை விட்டுக் கொண்டிராமல் அவற்றை நிரப்ப ஆவன செய்ய வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் 195 பாடசாலைகள் அதிபர் இல்லாமல் இயங்குகின்றன. இது மட்டும் அல்லாமல் 73 கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் (SLEAS) வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் 78 கல்வி சாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதில் 73 வெற்றிடங்கள்காவலாளிகள் ஆகும். காவலாளிகள் இல்லாமல் பாடசாலை காணப்படும் பொழுது களவு போவதற்கான வாய்ப்புகள் அதிகம். இவர்களை நியமிக்க தாமதம் இன்றி ஆவன செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் உடைந்து விழக் கூடிய நிலையில் உள்ள கட்டடங்களைக் கொண்ட 16 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றை திருத்தி அமைக்க 39 மில்லியன் ரூபா செலவு ஏற்படும்.

திருகோணமலை மாவட்டத்தில் 12 பாடசாலைகள் தொழிநுட்ப ஆய்வு கூடம் இன்றி இயங்குகின்றன. அதேபோல் வகுப்பறைகளை நவீன மயப்படுத்த வேண்டிய தேவை உள்ள 19 பாடசாலைகள் காணப்படுகின்றன.

அதேபோல் 15 பாடசாலைகள் வெள்ளப் பேரிடர் ஆபத்தோடு காணப்படுகிறன. இத்தோடு யானைத் தாக்குதல் அபாயத்துக்கு உள்ளாகக் கூடியவாறு 33 பாடசாலைகள் காணப்படுகின்றன. இடர்களில் இருந்து பாடசாலையை பாதுகாப்பதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதன் மூலம் நாட்டின் கல்வித் துறையின் வளர்ச்சிப் பாதை வினைத் திறனுடன் செயற்படும்.- என்றார்.





# இயந்திரங்களை பயன்படுத்தி கொழுந்து பறித்தல் முறைமை!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இயந்திரமயப்படுத்தப்பட்ட தேயிலை அறுவடை தொடர்பான பயிற்சிநெறி அண்மையில் வயல் ஊழியர்கள் மற்றும் தேயிலை பறிப்பவர்களுக்கு இராகலை, லிடெஸ்டேல், செயின்ட் லியோனார்ட்ஸ் மற்றும் மஹா ஊவா தோட்டங்களில் நடைபெற்றது.

அந்த தோட்டங்களில் பணிபுரியும் செயல் அலுவலர்கள், களப்பணியாளர்கள் மற்றும் தேயிலை பறிப்பவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு, தரமான மற்றும் திறமையான முறையில் இயந்திரங்களை பயன்படுத்தி தேயிலை கொழுந்து பறிப்பது குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சித் திட்டத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு மரியாதையுடன் உயர்தர சேவையை வழங்குவது, தோட்டங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், தேயிலையின் தரத்தைப் பேணுதல் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் பற்றாக்குறைக்கு எவ்வாறு தீர்வு காணல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டம் மஹிந்தபால தலைமையில் நடைபெற்றது. தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகள் பலர் இதில் கலந்துக்கொண்டனர்.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பெண் ஹட்டனில் கைது!

(க.கிஷாந்தன்)

ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு அமைவாக சந்தேக நபரான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (09) பிற்பகல் ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அருகில், ஹட்டன் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பதுளை, கந்தேகெதர பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.

இந்தச் சந்தேக நபர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களை ஏமாற்றி, கவர்ச்சிகரமான வட்டிக்கு பணம் தருவதாக பேஸ்புக்கில் விளம்பரம் செய்து, சுமார் 4.5 மில்லியன் ரூபாவைப் பெற்று, பணத்தை செலுத்தாமல் தலைமறைவாகியிருந்தவர் என்று தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# தேசிய வெளிக்கள நிலையத்தை திருடர்களிடமிருந்து மீட்டுத்தாருங்கள்

## நிறைவேற்று அதிகார செயற்குழு உறுப்பினர் கோரிக்கை

(எஸ்.ரகுதீஸ்)

"தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையம் ஊழல்வாதிகளாக செயற்பட்டு வருபவர்களின் கைகளில் சென்றுள்ளது. அங்கு பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை திருடர்களின் கைகளில் இருந்து மீட்டெடுத்து வடக்கு மாணவர்களிடம் கையளிக்க வேண்டும்."

- இவ்வாறு அந்நிலையத்தின் நிறைவேற்று அதிகார செயற்குழு உறுப்பினர் பரா. கஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையத்தில் இடம் பெற்று வரும் ஊழல்கள் குறித்து யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடமம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து தெரிவித்த தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையத்தின் நிறைவேற்று அதிகார செயற்குழு உறுப்பினரும் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளருமான பரா. கஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாரம்பரியம் மிக்க தொன்மை மிக்க பல தசாப்தங்களை கடந்து வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் மிகப்பெரும் பங்காற்றிக் கொண்டு இணைந்து செயற்பட்டுகொண்டிருக்கும் தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு இன்று அதன் சுயங்களை இழந்து கல்வி பின்னணியை விட்டு விலத்தி மாணவர் நலன்களையும் விட்டு விலத்தி வியாபார நோக்கான நிறுவனமாக மாறிக்கொண்டு வருகின்றது.

வடபிராந்தியத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோகத்துடன் கல்வி ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய வெளிக்கள நிலையமானது அக்காலத்தில் நிலவிய கல்வி முறைக்கமைவாக பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுடைய ஆளுகைக்குள் உட்படுத்தப்பட்டு அவர்களுடைய பங்குபற்றுதலுடன் கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி வரைக்கும் இயங்கிவந்தது.

ஆனால் அதற்கு பின் இதன் நிலைமை என்ன? வடக்கு மாகாணத்தை பொறுத்தவரைக்கும் கல்வியே எங்கள் மூலதனம். ஆனால் இன்று அதில் ஊழல்வாதிகளாக காணப்படும் ஓய்வுநிலை கல்வியாளர்களும் ஒரு சில பல்கலைக்கழகத்தை சேர்ந்த விரிவுரையாளர்களும் தனிப்பட்ட வருமானத்தை ஈட்டுவதற்காகவும், தனிப்பட்ட வருமானத்தை பெருக்குவதற்காகவும் தேசிய வெளிக்கள நிலையத்தின் நிலையான வைப்புகளில் இருக்கும் பெரும் தொகையான நிதியினை தங்கள் இஸ்டத்திற்கு பயன்படுத்துவதற்குமாக இந்த நிறுவனத்தை மாகாண கல்வித்திணைக்கத்தின் ஆளுகையில் இருந்து வெளிப்படுத்தி தனியே இரகசியமாக அதனை இயக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

மாகாண கல்வித் திணைக்களம், மாகாண கல்வி அமைச்சு, ஆளுநர் செயலகம், பிரதம செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோர் இணைந்து இதனை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்குறித்த அனைவருக்கும் எழுத்து மூலம் எங்களுடைய குற்றச்சட்டுகளை முன்வைத்துள்ளோம்.

அதனடிப்படையில் மாகாண கல்வி திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த தேசிய வெளிக்கள நிலையத்தினை மீள சீர்படுத்தி திருடர்களின் கைகளில் இருந்து மீட்டெடுத்து மீளவும் மாகாண கல்விப் பணிப்பாளரின் ஆளுகைக்கு உட்படுத்தி அதனை தேசிய வெளிக்கள நிலையத்தின் கோட்பாட்டிற்கு அமைவாக வடக்கு பிராந்தியத்தின் கல்வி அபிவிருத்திக்காக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்."- என்றார்.



### மன்னார் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று கட்டுப்பணத்தை செலுத்தியது

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று திங்கட்கிழமை (10) மதியம் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளரும், ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளருமான டானியல் வசந்தன் தலைமையில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

மன்னார் பிரதேச சபை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றமையால் மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் குறித்து உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையிலே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு மன்னார் மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சாதாரண தரம் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு!

க.பொ.த.சாதார தரம் 2024 மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது.

வேலும்மயிலும் பவுண்டேசன் மற்றும் களனி பல்கலைக்கழ தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இம்முறை க.பொ.த. சாதார தரம் பரீட்சையில் தோற்ற உள்ள மாணவர்களுகான பரீட்சை வழிகாட்டல்கள் எஸ்.அன்பழகன்(ஆங்கிலம்), எம்.கண்ணகுமார்(வரலாறு), பரா.ரதீஸ்(தமிழ்) ஆசிரியர்களாலும் களனி பல்கலைக்கழ சிரேஷ்ட மாணவர்களினால்(கணிதம் மற்றும் விஞ்ஞானம்) வழங்கிவைக்கப்பட்டிருந்தது.

இப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கிற்கு, வேலும்மயிலும் பவுண்டேசன் மூலம் முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர்.







# தேர்தல் போட்டியில் சமனிலை பேணப்பட வேண்டியது அவசியம்

***மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் விக்ரர் வலியுறுத்து***

**(எஸ்.நிதர்ஷன்)**

ஒரு நாட்டில் அமையும் அரசுகளே மக்களின் வாழ்க்கை முறையை தீர்மானிக்கின்றன. அனால் அந்த அரசையும் அரசியலையும் தீர்மனிப்பது மக்களே. தமக்கான அந்த அதியுயர் சக்தியை மக்கள் சரியாக பயன்படுத்தி வெற்றி கொள்வது மிக அரிதாக உள்ளது

இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக் கான நிலயத்தின் பணிப்பாளர் விக்ரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் செலவீனங்களை முன்னி றுத்திய தேர்தல் பிரசாரங்கள் அதன் மதிப்பீடு செய்யப்பட செலவீனங்கள் தொடர்பில் கண்காணிப்பு தொடர்பி லான மாவட்ட மட்ட தேர்தலுடன் தொடர் புடையவர்களுடனான கலந்துரையடல் இன்று (10) யாழ்ப்பாணத்தில் நடை பெற்றது.

அரியாலை சர்வோதய மண்ட பத்தில் நடைபெற்ற இந்தக் கலந்து ரையாடலில் யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சசீபன், யாழ். மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், அர சியல் கட்சிகள் சார் பிரதிநிதிகள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலை யத்தின் அதிகாரிகள் எனப் பல ரும் கலந்துகொண்டு தத்தமது கருத் துக்களை முன்வைத்திருந்தனர்.

இதன்போது இவ்வாறு தெரி வித்திருந்த விக்ரர் மேலும் தெரி விக்கையில்,

தேர்தலின் முக்கிய பங்குதாரரான வாக்காளர்களுக்கும், தேர்தல்



திணைக்களம், பொலிஸார், கண் காணிப்பு அதிகாரிகள், இடையான தகவல் பரிமாற்றம் என்பது ஒவ்வொரு தேர்தலிலும் பலவகையான தாக்கங் களைச் செலுத்தி வருகின்றன. இதை ஒரு முறையான பொறிமுறைக்குள் கொண்டுவருவது அவசியமாகும்.

மற்றும் தேர்தல்கால வன்முறை களை இனங்காண்டு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கல், அவற்றைக் கட்டுப் படுத்தல், தேர்தல் செலவீனங்களைக் கையாளுதல் உள்ளிட்ட விடயங்களும் தற்போது பேசுபொருளாக இருக் கின்றன.

இதேநேரம் வரவுள்ள தேர்தல்களால் சமூக ஊடகங்களின் தாக்கம் அதிக மானதாக இருக்கும் என்பது ஒரு பொதுக் கருத்தாக இருக்கின்றது.

இந்த தாக்கம் தனி நபரையோ, கட்சிகளையோ பாதிப்பதாக அமையு மானால் அதை எவ்வாறு எதிர்கொள் வது, அதற்கு எதிரான சட்டரீதியான நடவடிக்கைக்கு எவ்வாறு செல்வது என்பதும் பலருக்கு கடினமான ஒன் றாகவே இருக்கின்றது.

அதனடிப்படையில் இதற்கான விழிப்புணர்வு மிக அவசியமாகும். அதையே இந்தக் கலந்துரையாடல் உறுதி செய்யும் என்று நினைக் கின்றேன்.

சட்டதில்உள்ளசிறுஇடைவெளிளைப் பயன்படுத்தி போலி தகவல்களை பரப்பு வோர் தப்பித்துக்கொள்ளும் நிலை இருப்பதனால் அத்தகைய தவறான செய்திகளைப் பரப்புபவர்களை இனங் கண்டு நடவடிக்கை எடுப்பதற்குப் பொலி ஸாரும் துறைசார் வல்லுநர்களும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு முழுமை யான ஒத்துழைப்பு வழங்குவது அவசி யமாகும்.

இதேநேரம் தேர்தல் வன்முறைக ளைக் கண்காணிப்பதற்கான நிலைய மானது கடந்த 28 வருடங்களாக இலங் கையில் தனது செயற்பாட்டை முன் னெடுத்து வருகின்றது.

எமக்குநாட்டிலுள்ளகட்சிகள்அனைத் தும் சமனானதே. தேர்தல் போட்டியில் சமனிலை பேணப்படுவதை உறுதி செய்வதை வலியுறுத்தவே நாம் எமது கண்காணிப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதுமட்டுமல்லாது தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் வகிபாகம் அதிகரிப்பதை உறுதிசெய்ய அதற்கான விழிப்புணர்வுகளை ஒவ்வொரு மக்களுக்கும் சென்றடையும் வகையில் முன்னெடுத்தும் வருகின்றோம்.- என்றார்.





# யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் மருத்துவ முகாமும் இரத்ததானமும்

**(எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் 2004 உயர்தரப் பிரிவு பழைய மாணவர்களால் இன்று (10) மருத்துவ முகாம் மற்றும் இரத்ததான முகாம் என்பன நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பீற்றர் மண்டபத்தில் இன்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இரத்ததான முகாமில் பலர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

இதேவேளை, கல்லூரி ஆசிரியர்களுக்கான விசேட மருத்துவ முகாமும் இடம்பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் 2004 பிரிவு மாணவர்கள் தற்பொழுது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்ந்துவரும் நிலையில் தமது அணியின் 40 ஆவது அகவை பூர்த்தியை முன்னிட்டு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.









# அரசு மரியாதை வரவேற்புக்கும் மக்களின் அன்புக்கும் நன்றிகள்

## இளையராஜா நெகிழ்ச்சி



ஆசிய கண்டத்தில் இருந்து சிம்பொனியை எழுதி, அரங்கேற்றிய முதல் இசையமைப்பாளர் எனும் சாதனையை படைத்து தமிழகம் திரும்பிய இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு அரசு மரியாதையுடன் வரவேற்பு நல்கப்பட்டது.

அப்போது அவர், "அரசு மரியாதைக்கும், மக்களின் அன்புக்கும் நன்றி" என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

முன்னதாக இசையமைப்பாளர் இளையராஜா, தனது முதல் சிம்பொனி இசையை லண்டனில் அரங்கேற்றம் செய்தார். அங்குள்ள ஈவென்டிம் அப்போலோ அரங்கில் சிம்பொனி இசையை அரங்கேற்றம் செய்தார். உலகின் மிகச் சிறந்த ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழுவுடன் இணைந்து அவர் அதை அரங்கேற்றினார்.

நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு இன்று காலை சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அவரை தமிழக அரசின் சார்பில் அமைச்சர் தங்கம் தென்னரசு வரவேற்றார். தொடர்ந்து பேசிய அமைச்சர், "தனது வாழ்நாள் விருப்பத்தை நிறைவேற்றி இந்தியாவுக்கு மட்டுமின்றி ஆசிய கண்டத்துக்கே பெருமை சேர்த்து திரும்பியுள்ளார் இசைஞானி இளையராஜா. அவரை, தமிழக மக்கள் சார்பாக உரிய மரியாதையுடன் வரவேற்கக் முதல்வர் ஸ்டாலின் எனக்கு வலியுறுத்திக் கூறியிருந்தார். இன்று அரசின் சார்பாக நான் வந்துள்ளேன். மிகுந்த பெருமிதத்தோடு தமிழக மக்கள் சார்பில் நாம் அவரை வரவேற்கிறோம். நம் அனைவருக்கும் இளையராஜா ஒரு பெருமித அடையாளம்." என்றார். தொடர்ந்து பா.ஜ.க, வி.சி.க. பிரமுகர்களும், திரைப் பிரபலங்களும் இளையராஜாவை வாழ்த்திப் பேசினர்.

தொடர்ந்து இளையராஜா கருத்து தெரிவிக்கையில்,

"அனைவருக்கு நன்றி. என்னை நீங்கள் அனைவரும் மலர்ந்த முகத்தோடு வழியனுப்பி வைத்தீர்கள். அத்துடன் இறைவன் ஆசிர்வதித்தார். சிம்பொனி நிகழ்ச்சியை சிறப்பாக முடித்துத் திரும்பியுள்ளேன்.

இசைக் குறிப்பை யார் வேண்டுமானாலும் எழுதிடலாம். அவ்வாறாக எழுதிக் கொடுத்தால் அதை யார் வேண்டுமானாலும் வாசித்துவிடலாம். ஆனால், அதை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி வாசித்தால் என்னவாகும். அப்படி ஆகிவிடாமல் லண்டனில் கண்டக்டர் மைக்கேல் டாம்ஸ் சிறப்பாகச் செய்து தந்தார். நான் இங்கிருந்து லண்டன் சென்றதும் ஒரே ஒரு ஒத்திகையில் கலந்து கொள்ளவே நேரமிருந்தது. சிம்பொனி அரங்கேற்றத்தில் அதன் விதிமுறைகளை மீறிவிடக்கூடாது. அதைப் பின்பற்றி 80 இசைக் கலைஞர்களும் ஒன்றிணைந்து மியூஸிக் கண்டக்டரை கவனிக்க வேண்டும். அவ்வாறாக ஒவ்வொரு ஸ்வரத்திலும் அவர்கள் கவனத்தை குவித்து வாசித்தபோது கேட்பவர்கள் மூச்சுவிட மறந்து ரசித்தனர்.

சிம்பொனியில் மொத்தம் 4 பகுதிகள். அந்த 4 மூவ்மென்ட் முடியும் வரை யாரும் கைதட்டக் கூடாது. அது விதிமுறை. ஆனால் அதற்கு மாறாக ரசிகர்கள் ஒவ்வொரு மூவ்மென்ட் முடிந்தபின்னர் கைதட்டி ஆச்சரியப் படுத்தினர். ரசிகர்கள் ஆர்ப்பரிக்கும் போது கண்டக்டர் மைக் என்னைப் பார்த்து மகிழ்ச்சியில் சிரிப்பார்.

மேலும், சிம்பொனியின் இரண்டாவது பகுதியில் நான் இசையமைத்த சினிமாப் பாடல்கள் இசைக்கப்பட்டன. அதில் ஒரு பாடலை நான் அவர்களோடு இணைந்து பாடினேன். எனக்கு இங்கே எனது இசைக்குழுவுடன் பாடியே பழக்கம். அவர்களோடு பாடி எனக்குப் பழக்கமில்லை. ஆனால் அவர்களோடு பாடினேன். அது மிகவும் கடினம். அதற்கும் மக்கள் நல்ல வரவேற்பு கொடுத்தார்கள்.

மொத்தத்தில் இந்த சிம்பொனி இசை வல்லுநர்கள் பாராட்டிய சிம்பொனியாகியுள்ளது. அது உங்களின் வாழ்த்து. இதை நான் அரங்கேற்றியது தமிழகத்துக்கும், இந்தியாவுக்கும் பெருமை.

மேலும், முதல்வர் அரசு மரியாதையோடு வரவேற்றது நெகிழ்ச்சியாக உள்ளது. அதேபோல், தமிழக மக்களின் வாழ்த்தும், வரவேற்பும் எனக்குப் பெருமையாக இருக்கிறது.

சிம்பொனி இசையை நீங்கள் டவுன்லோடு செய்து கேட்கக் கூடாது. அதை அந்த இசைக்கலைஞர்கள் இசைக்க அமைதியான அரங்கில் நீங்கள் நேரடியாகக் கேட்க வேண்டும். அதனால், 13 தேசங்களில் சிம்பொனி இசை நிகழ்ச்சி நடக்கவுள்ளது. டுபாய், பாரிஸ், ஜெர்மன் இப்படி பல நாடுகளில் இந்த நிகழ்ச்சி நடக்கப் போகிறது.

என் மீது மக்களாகிய நீங்கள் அதீத அன்பு வைத்துள்ளீர்கள். என்னை, இசைக்கடவுள் எனக் கூறுகிறீர்கள். நான் சாதாரண மனிதன், என்னைப் பற்றி எனக்கு எந்த எண்ணமும் இல்லை. சொல்லப்போனால் நீங்கள் என்னைக் கடவுள் என்று அழைக்கும் போது, கடவுளை ஏன் இளையராஜா அளவுக்கு இறக்குகிறார்கள் என்றே நினைப்பேன். இந்த சிம்பொனி நிகழ்ச்சி ஒரு ஆரம்பம். 82 வயதாகி விட்டது, இப்போது என்ன ஆரம்பம் என நினைக்காதீர்கள். நீங்கள் நினைக்கும் எந்த அளவிலும் நானில்லை.

பண்ணைபுரத்தில் வெறுங்காலில் நடந்தேன். வெறுங்காலுடன் தான் இங்கே வந்தேன். இன்று சிம்பொனி இசைத்து வந்துள்ளேன். முடிந்தால், இளைஞர்கள் என்னை முன்மாதிரியாக வைத்து அவரவர் துறையில் முன்னேறி நாட்டுக்கு நலம் சேர்க்க வேண்டும். இதுவே எனது அறிவுரை." என்றார்.

# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கவலைக்கிடமாகவே உள்ளது

## ஜி.கே.வாசன் தெரிவிப்பு



தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கவலைக்கிடமாக உள்ளது என தமாகா தலைவர் ஜி.கே.வாசன் குற்றச்சாட்டு விமர்சித்துள்ளார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் நேற்று கோவை சென்றார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, த.மா.கா. சார்பில் 12 பெண் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மகளிருக்கு கொடுக்க கூடிய முக்கியத்துவத்தை சரியாக செய்து வருகிறோம். பெண்கள் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம்.

தற்போது பெண்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாக உள்ள பாலியல் பிரச்னைகளுக்கு அரசு முற்று புள்ளி வைக்க வேண்டும். தமிழகத்தில் தொடர்ந்து பாலியல் தொந்தரவுகள் நடக்கின்றன. பெண்கள் அச்சமின்றி வெளியில் செல்ல அரசு வழிவகுக்க வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் பெண்களின் முக்கியத்துவத்தையும், பெண்கள் எதிர்கொள்ளும் விஷயங்கள் குறித்தும், ஆவண படங்கள், பாடங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். 2030 இற்குள் பாலின சமத்துவதிற்கு ஐ.நா. கூறியதை மகளிர் அனைவருக்கும் தெரியபடுத்த விரும்புகிறேன். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கவலைக்கிடமாக உள்ளது." - என்றார்.

# இருளில் மூழ்கிறது காஸா!



காஸாவிற்கான மின்சார விநியோகத்தை துண்டிக்குமாறு இஸ்ர லின் எரிசக்தி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இஸ்ரேலியர்களை விடுவிப்பதற்காக ஹமாஸ் தரப்பினருக்கு அமெரிக்கத் தரப்புகள் மிகவும் உதவியாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்காக இன்று டோகாவிற்கு ஒரு குழுவை அனுப்புவதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காஸாவிற்கு அனுப்பி வைக்கப்படும் அனைத்து மனிதாபிமான நிவாரணங்களையும் இஸ்ரேல் தொடர்ந்து தடுத்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், எரிபொருள் பற்றாக்குறை காரணமாக காஸாவிலுள்ள 6 வெதுப்பகங்களின் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



## அமெரிக்கப் பொருள்களுக்கு சீனா விதித்த வரி இன்று முதல் அமுலுக்கு வருகிறது

அமெரிக்கப் பொருள்களுக்கு சீனா விதித்த வரி இன்று அமுலுக்கு வருகிறது.

சீன பொருட்களுக்கு அமெரிக்கா வரி விதித்ததற்குப் பதிலடியாக அமெரிக்க பொருள்களுக்கு 10 முதல் 15 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அமெரிக்காவின் விவசாய பொருள்களுக்கு சீனா விதித்த வரி இன்று அமுலுக்கு வருகிறது.



# பாகிஸ்தானில் முகாமின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் கராச்சியில் ஆப்கானிஸ்தானியர்கள் தங்கியுள்ள முகாமின் மேற்கூரை இடிந்து விழுந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் அந்நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுனிதா வில்லியம்ஸ் பூமிக்கு வருகின்றார்

## திகதியை அறிவித்தது நாசா




நாசா விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் 9 மாதங்களுக்குப் பின் பூமிக்குத் திரும்புகிறார்.

விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் ஆய்வுக்காகக் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு சென்றனர்.

போயிங் ஸ்டார் லைனர் விண்கலத்தில் இருவரும் 8 நாள் பயணமாக விண்வெளி மையத்துக்கு சென்ற நிலையில் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இருவரும் சர்வதேச விண்வெளி மையத்திலேயே தற்போது வரை உள்ளனர்.

அவர்களது பயணம், தற்போது 9 மாதங்களை எட்டியுள்ளநிலையில் அவர்களைப் பூமிக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இருவரும் விரைவில் பூமிக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மார்ச் 16 ஆம் திகதி ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலத்தில் பூமிக்கு அழைத்து வரப்படுவார்கள் என்று நாசா உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது.

கனடா முரசு

திங்கட்கிழமை 10/03/2025

## கனேடிய மாணவி ஒருவர் கட்டுநாயக்கவில் கைது

கனேடியப் பெண் ஒருவர் பயணப் பொதியில் மறைத்து வைத்திருந்த 175 மில்லியன் ரூபா பெறுமதியான ஹஷீஷ் போதைப்பொருளுடன் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து

02




# கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி தெரிவானார்

**அமெரிக்க பரஸ்பர வரி விதிப்புக்கு பணிய மாட்டோம் என தெரிவிப்பு**

**கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.**

**ஜஸ்டின் ட்ரூடோ தனது பதவியை இராஜினாமா செய்கின்றேன் என கடந்த ஜனவரி மாதம் அறிவித்தார்.**

**லிபரல் கட்சியின் தலைவரான ஜஸ்டின் ட்ரூடோ, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் கனடாவின் பிரதமராகப் பதவி வகித்தார். அவர் பதவி விலகியதைத் தொடர்ந்து, லிபரல் கட்சியின் அடுத்த தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.**

இதில் 59 வயதான மார்க் கார்னி 1,31,674 வாக்குகள் பெற்று 85.9 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கிறிஸ்டியா பிரீலாண்ட் 11,134 வாக்குகளையும், கரீனா கோல்ட் 4,785 வாக்குகளையும் பெற்றனர்.

இதன் மூலம் லிபரல் கட்சியின் புதிய தலைவராகவும், கனடாவின் 24 ஆவது பிரதமராகவும் மார்க் கார்னி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பிரதமராக தேர்வான பின்னர் மார்க் கார்னி ஆற்றிய வெற்றி உரையில்,

“டொனால்ட் ட்ரம்ப் வர்த்தகப் போரைத் தொடரும்வரை அமெரிக்கப் பொருள்கள் மீதான பரஸ்பர வரியை கனடா கைவிடாது. கனடா அரசு சரியான பாதையிலேயே செல்கிறது. நமக்கு அமெரிக்கா உரிய மரியாதை கொடுத்து நம்பகத்தன்மை வாய்ந்த, நியாயமான வர்த்தகத்தை உறுதி செய்யும் வரை நாம் விதித்த வரி அமுலில்தான் இருக்கும்.” என்றார்.



# கனடா ஒருபோதும் அமெரிக்காவின் பகுதியாக இருக்காது: மார்க் கார்னி



நம்முடைய நாட்டின் நீர், நிலம், வளங்கள் ஆகிய வற்றை அமெரிக்கா விரும்புகிறது என்றும் ட்ரம்ப் நமது கனேடிய தொழிலாளர்கள், குடும்பங்கள், வணிகங்களைத் தாக்குகிறார் எனவும் கனடா புதிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற நாள் முதல் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கத் தீவிரம் காட்டி வருகிறார். இவ்வாறான சூழலில், இந்த ஆண்டு ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக, கனடா பிரதமர் பதவியை இராஜினாமா செய்கிறேன் என ஜஸ்டின் ட்ருடோ அறிவித்தார்.

மேலும், ``கனடா அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாறுமா? அதற்கு வாய்ப்பே இல்லை. ட்ரம்பின் அச்சுறுத்தல்களால் கனடா ஒருபோதும் பின்வாங்காது" என்று தெரிவித்த ஜஸ்டின் ட்ருடோ, ஆளும் லிபரல் கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வரையில் பதவியில் தொடர்வேன் என்று கூறினார்.

இந்த நிலையில், லிபரல் கட்சியின் தலைவராகவும், கனடா பிரதமராகவும் இங்கிலாந்து , கனடா மத்திய வங்கியின் முன்னாள் தலைவர் மார்க் கார்னி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

வெற்றிக்குப் பிறகு பேசிய மார்க் கார்னி உரையாற்றுகையில்,

``நம்முடைய நாட்டின் நீர், நிலம், வளங்கள் ஆகிய வற்றை அமெரிக்கா விரும்புகிறது. ட்ரம்ப் நமது கனேடிய தொழிலாளர்கள், குடும்பங்கள், வணிகங்களைத் தாக்குகிறார். இதில், அவரை வெற்றிபெற அனுமதிக்க முடியாது. இந்தத் தருணத்தில், கனேடியர்களுக்குத் தேவைப்படுவது கனடாவுக்காக நிற்பதுதான்.

சிறந்த தேசத்தை உருவாக்கப் போராடத் தயாராக இருக்கிறேன். கனடா ஒன்றும் அமெரிக்கா அல்ல. ஒருபோதும் அமெரிக்காவின் ஒரு பகுதியாகக் கனடா இருக்காது. நெருக்கடிகளை எவ்வாறு நிர்வகிப்பது என்று எனக்குத் தெரியும். இதுபோன்ற சூழ்நிலையில், நெருக்கடி மேலாண்மையில் உங்களுக்கு அனுபவமும், பேச்சுவார்த்தை திறனும் தேவை." என்று கூறியுள்ளார்.

## கனேடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 20 வயதுடைய கனேடிய இளங்கலை பட்டம் பெறவிருக்கும் மாணவி என்பதோடு, இவர் இலங்கைக்கு வருகைதரும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

அவர் கனடாவின் டொராண்டோவிலிருந்து இந்த போதைப்பொருளுடன் அபுதாபிக்கு வந்திருந்தார். அங்கிருந்து, இரவு 8.35 மணிக்கு எதிஹாட் எயார்வேஸ் விமானம் EY-396 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் கொண்டு வந்த பயணப் பொதியில் 3 போர்வைகளில் சுற்றப்பட்ட 17 கிலோகிராம் 573 கிராம் ஹஷீஷ் போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

மேற்படி பெண்ணும் அவர் கொண்டு வந்த போதைப் பொருள் உள்ளிட்ட பொருள்கள் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.





## துப்பாக்கிச் சூட்டியல் பெண் உயிரிழப்பு

கனடாவின், மார்க்கம் நகரத்தில் வீடொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒரு பெண் உயிரிழந்துள்ளார். ஆண் ஒருவர் தீவிரமான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வீட்டின் மீது பலமுறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சோலஸ் ரோட் பகுதியின் கேஸ்டில்மோர் அவென்யூ மற்றும் ஸ்வான் பார்க் ரோட் அருகே இந்த வீடு அமைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவரையும் மீட்டுள்ளனர். மேலும், சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு நாயையும் கண்டுள்ளனர்.

உடனே இருவரும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், 20 வயதான நீலக்ஷி ரகுதாஸ் என்ற மார்க்கம் பகுதியைச் சேர்ந்த பெண் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

இந்த வீடு 2018 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து முறை துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளது.

பொலிஸார் கண்காணிப்பு காட்சிகளை வெளியிட்டிருந்தாலும், இதுவரை எந்தக் கைது நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

பொலிஸார் இதுகுறித்து மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.






# கனடாவின் 24 ஆவது பிரதமர் மார்க் கார்னி; பின்னணி மற்றும் எதிர்கால சவால்கள்

கனடாவின் லிபரல் கட்சியின் தலைமைத் தேர்தலில் வெற்றி பெற்ற மார்க் கார்னி, கட்சித் தலைவராகத் தெரிவானதோடு, நாட்டின் புதிய பிரதமராகப் பதவியேற்கின்றார். முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவி விலகலுக்குப் பிறகு நடைபெற்ற இந்தத் தேர்தல், கனடிய அரசியல் மற்றும் பொருளாதாரத்தின் எதிர்காலத்திற்கான முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

**தலைமைத் தேர்தல் மற்றும் அரசியல் சூழல்**

லிபரல் கட்சியின் உள்நாட்டு மோதல்கள் மற்றும் பொருளாதாரச் சரிவு காரணமாக, ட்ரூடோவின் பதவி விலகல் கட்சியை மேலும் பலவீனப்படுத்தியது. இந்த நெருக்கடியில், முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மார்க் கார்னி, கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, பொருளாதார மீட்புக்கான நம்பிக்கையின் சின்னமாகவும் உள்ளார். கார்னியின் தலைமையில் லிபரல் கட்சி 2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தயாராகும் நிலையில், எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியுடனான போட்டி கணிசமாக உயர்ந்துள்ளது.

**பொருளாதார மீட்புக்கான எதிர்பார்ப்புகள்**

2008 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மந்தநிலை முதல் 2020 ஆம் ஆண்டு பிரெக்சிட் வரை, கனடா மற்றும் இங்கிலாந்தின் மத்திய வங்கி ஆளுநராகச் செயல்பட்ட கார்னி, நெருக்கடி நிர்வாகத்தில் நிபுணத்துவம் பெற்றவர். கனடாவின் தற்போதைய பொருளாதாரச் சரிவு (குறைந்த வளர்ச்சி, உயர் வாழ்வாதாரச் செலவுகள் மற்றும் வீட்டுச் சந்தைப் பிரச்சினைகள்) மற்றும் கார்பன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கிடையே, அவரது பொருளாதாரக் கொள்கைகள் கவனத்தை ஈர்க்கின்றன.

குறிப்பாக, புருக்ஃபீல்ட் அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தில் துணைத் தலைவராக இருந்த அவரது பங்கு, அரசாங்கத்துடனான முதலீட்டு முரண்பாடுகள் குறித்து விமர்சனங்களை ஈட்டியுள்ளது.

அரசியல் விமர்சனங்கள் மற்றும் சவால்கள்:

கார்னியின் நியமனத்தைச் சுற்றி பல சர்ச்சைகள் உருவாகியுள்ளன.

**அனுபவம் இல்லாத அரசியல் புதுமுகம்:**

அரசியல் பதவி வரலாறு இல்லாத கார்னி, நெருக்கடிகளுக்கு ஆளான நாட்டை வழிநடத்துவதில் திறன் குறித்து சிலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

**நிதி ஆலோசகர் பதவி சர்ச்சை:**

2024 இல் பிரதமரின் நிதி ஆலோசகராகப் பணியேற்றதற்கு, 'நியமன முரண்பாடுகள்' மற்றும் 'தனியார் நிறுவனத்திற்கான அரசு முதலீட்டு முன் நடவடிக்கைகள்' குறித்து எதிர்கட்சிகள் கடும் விமர்சனங்களை முன்வைத்தன.

முன்னாள் நிதி அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்டின் பதவி விலகல் மற்றும் ட்ரூடோவின் வெளியேற்றம், லிபரல் கட்சியின் ஒற்றுமையைப் பலவீனப்படுத்தியுள்ளது

1965 இல் கனடாவின் வடமேற்கு பிரதேசத்தில் பிறந்த கார்னி, ஆல்பர்டாவின் எட்மன்டனில் வளர்ந்தார். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பட்டம் பெற்று, ஆக்ஸ்ஃபோர்டில் முதுகலை படிப்பை முடித்தார்.

**தொழில் வாழ்க்கை:**

கோல்ட்மேன் சாக்ஸ் வங்கியில் 13 ஆண்டுகள் பணியாற்றியதோடு, 2003-2007 காலகட்டத்தில் கனடிய மத்திய வங்கியின் துணை ஆளுநராகவும், 2007-2013 வரை ஆளுநராகவும் பணியாற்றினார். 2013-2020 வரை இங்கிலாந்து மத்திய வங்கி ஆளுநராக இருந்த கார்னி, பிரெக்சிட்டின் பொருளாதார விளைவுகள் குறித்து முன்கூட்டியே எச்சரித்ததற்காகப் பாராட்டப்பட்டார்.

**சுற்றுச்சூழல் பங்களிப்பு:**

கனடாவின் கார்பன் வரி மற்றும் பசுமைப் பொருளாதார மாற்றத்திற்கான நிதி மாதிரிகளை வடிவமைத்ததில் முக்கியப் பங்கு வகித்தார்.

**எதிர்காலத்திற்கான பணிகள்:**

கார்னியின் முன்னுரிமைகளில் பொருளாதார மறுசீரமைப்பு, குடிமக்களின் வாழ்வாதாரச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் கனடாவை பசுமைப் பொருளாதார முன்னணி நாடாக மாற்றுதல் ஆகியவை அடங்கும். எனினும், அரசியல் பரிமாற்றங்கள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளின் வெற்றி தான் அவரது பதவியின் நீடிப்பைத் தீர்மானிக்கும்.

"பொருளாதார நிபுணத்துவம் மட்டும் போதாது; மக்களின் நம்பிக்கையை ஈட்டுவதே முக்கியம்"






# கனடாவின் 24 ஆவது பிரதமர் மார்க் கார்னி; பின்னணி மற்றும் எதிர்கால சவால்கள்











# பிராம்ப்டனில் பாலியல் தாக்குதல் குற்றச்சாட்டில் மதகுரு ஒருவர் கைது

கடனாவின் பிராம்ப்டன் நகரத்தை சேர்ந்த மதகுரு ஒருவர் பாலியல் தாக்குதல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

69 வயதான ஆசோக் குமார் என்பவர் ஒரு வீட்டிற்கு மத நிகழ்ச்சி நடத்தச் சென்றுள்ள நிலையில், அந்த வீட்டில் பெண் ஒருவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், மேற்படி மதகுருவை பொலிஸார் கைது செய்து பாலியல் தாக்குதல் குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அந்த மதகுருவை அசோக் சர்மா என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் பல ஆண்டுகளாக பிரம்டனில் மதத் தலைவராக இருந்து வருகிறார்.



சந்தேக நபரின் செயற்பாடுகளினால் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.